வன்செயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் துரித செயற்திட்டத்தினது (சீஏஆர்ஈ) - கூறுசீ 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையேயான 2010 ஜுன் 07 ஆந் திகதிய 2626 - எஸ்ஆர்ஐ இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2, பிரிவு IIபீ உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் செயற்திட்டக் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சான தற்போதைய கொள்கை திட்டமிடல், பொருளாதார விவகார, சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சு நிறைவேற்று முகவராகும். பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், தொழிற் பயிற்சி அதிகார சபைக்கான இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாண சபையின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகும். வன்செயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதார, பொருளாதாரக் கட்டமைப்பையும் நிர்வாக மற்றும் சட்டபூர்வ சேவைகளையும் மீள ஏற்படுத்தி அவற்றை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டக் கூறு ''சீ'' இன் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 39.06 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 35.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது மொத்தக் கிரயத்தின் 89 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியிருந்தது. 2010 ஜுன் 07 ஆந் திகதி ஆரம்பமாகிய செயற்திட்டம் 2013 ஜுன் 30 ஆந் திகதி முடிவுற்றது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்துள்ளது.

## 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

உடன்படிக்கைப் பிரகாரம், செயற்திட்டத்தின் கூறு ''சீ''க்கான நடவடிக்கைகளின் பொழிப்பு பின்வருமாறு.

பகுதி 6 : நடுத்தர மற்றும் சிறிய அளவிலான 10 நீர்ப்பாசனத் திட்டங்களை மீள ஏற்படுத்துதல்

பகுதி 7 : பத்து நிர்வாக அலுவலகங்களை மீளவமைத்து அவற்றிற்கான வசதிகளை வழங்குதல்

பகுதி 8 : கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்களைப் புனரமைத்து மீள நிர்மாணித்தல்

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தன. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கையின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட டொலர் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்களும் மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளனவா என்பதும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை இலங்கை மத்திய வங்கி (சீபிஎஸ்எல்) யின் அத்தினத்தில் உள்ளவாறான கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அது பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்

(இ) விசேட டொலர் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்களும் மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளனவா என்பதும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை இலங்கை மத்திய வங்கி (சீபிஎஸ்எல்) யின் அத்தினத்தில் உள்ளவாறான கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்று உடன்படிக்கைப் பிரகாரம் மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 2,246,480,822 ஆகும். 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 4,491,658,831 ஆகும். மீளாய்வாண்டு, முன்னைய ஆண்டு, 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | ஆண்டிற்கான செலவினம் 2013 | 2012 | 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| குடியியல் வேலைகள் | 2,158,139,415 | 1,414,076,206 | 4,243,059,904 |
| அலுவலக உபகரணம் | 106,654 | - | 650,454 |
| ஆலோசணை | 38,842,907 | 41,584,104 | 150,049,269 |
| அதிகரித்துச் செல்லும் செயற்பாட்டுக் கிரயம் | 30,185,821 | 15,226,286 | 61,285,627 |
| கடப்பாட்டுக் கட்டணம் | 19,206,025 | 12,687,390 | 36,613,577 |
| | 2,246,480,822 | 1,483,573,986 | 4,491,658,831 |

## 4.2 கட்டுநிதிக் கணக்கு

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதிலான கட்டுநிதிக் கணக்குச் செயற்பாடுகள் மற்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| | அமெரிக்க டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி | 470,469 | 59,825,196 |
| கூட்டுக : மீளளிப்புகள் | 5,024,358 | 644,595,682 |
| மீளமதிப்பீட்டு இலாபம் | - | 2,077,717 |
| | 5,494,827 | 706,498,595 |
| குறைக்க : பற்றுதல்கள் | 5,487,540 | 705,545,724 |
| 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 7,287 | 952,871 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 06 ஒப்பந்தகாரர்களுக்கு வேலையைத் தொடங்குவதற்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 98,180,975 கூட்டுத்தொகையானது அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) நீரப்பாசனத் திணைக்களத்தின் பொருட்டு ஏற்பட்ட ரூபா 114,248 மின்சார மற்றும் தொலைபேசி செலவினமானது செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினமாகத் தவறுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) கடன் தொகையின் மூலம் ஒப்பந்தகாரர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,460,000 க்கான அளவை உபகரணங்கள் செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களாகக் கணிக்கப்படாது ஒப்பந்தக் கிரயமாகக் கணிக்கப்பட்டிருந்தது.

## 5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

2003 செப்டம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு ஒப்பந்தகாரருக்குமான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுத் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடனும் மாதாந்தம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்தகாரர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரியினது கூட்டுத்தொகையாகிய ரூபா 70,291,633க்குரிய விபரமானது குறித்த காலப் பகுதிக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படாதிருந்தமை கணக்காய்வு மாதிரிச் செவ்வையின்போது புலனாகியது.

## 5.3 கணக்காய்விற்கான சான்றின்மை

நாற்பத்து நான்கு குளங்களைப் புனரமைப்புச் செய்தபோது ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவாகிய ரூபா 38,842,907 தொடர்பாக உசாத்துணையாளர்கள் மேற்கொண்ட நேரடி அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயலாற்றல் மீளாய்வு

## 6.1 நிதிப் பயன்பாடு

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சில குறிப்பிடத்தக்க நிதியளிப்பு மற்றும் வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாட்டினது புள்ளி விபரங்கள், மீளாய்வாண்டிற்கான நிதிப் பயன்பாடு மற்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | வழங்குவதற்குள்ள நிதி | | 2013 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்ட நிதி ஏற்பாடு | ஆண்டின்போது பயன்படுத்திய நிதி | | 2013 டிசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 35.27 | 3,985.51 | 548.30 | 14.67 | 1,907 | 26.29 | 3,417.95 |
| இலங்கை அரசாங்கம் | 3.79 | 428.27 | 207.00 | 1.73 | 225 | 3.82 | 496.26 |
| மொத்தம் | 39.06 | 4,413.78 | 755.30 | 16.40 | 2,132* | 30.11 | 3,914.21* |

- ❖ ஆண்டின் முடிவில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியன சேர்த்துக் கொள்ளப்படாமையால், இவ்வறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட்ட தொகையுடன் இப்புள்ளி விபரம் இணக்கமுறவில்லை. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலப்பகுதியின்போது பதவியணியினர் எய்த வேண்டிய இலக்குகளுடனான பொறுப்புகளை இனங்காண்பதற்குரிய செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் முழு அளவிலான முன்னேற்றத்தை முறையாகப் பகுப்பாய்வு செய்து, திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறித்த இலக்குகளை எய்துவதற்கான நோக்கினைச் செய்யமுடியாது போயிற்று.

(ஆ) கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களது புனரமைப்பும் புனர் நிர்மாணமும் தொடர்பாக உடன்படிக்கைப் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் செயற்திட்டம் ஆரம்பமாகி 3 ஆண்டுகள் முடிவுற்ற போதிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

**6.2 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமதி சேர் வரித் தேவைகளுக்கான பதிவு இலக்கங்களது பெறுமதியைச் சரி, பிழை பார்க்காது செயற்திட்டம் மேற்கொண்ட 05 புனரமைப்பு வேலைகளுக்கு பெறுமதி சேர் வரியான ரூபா 2,457,468 கூட்டுத்தொகை வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் நேரத்தில் குறித்த ஒப்பந்தகாரர்களது பெறுமதிசேர் வரிக்கான பதிவு இலக்கங்கங்கள் காலாவதியாகி இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தினது புனரமைப்பு வேலைத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கல்விளாங்குளம் எனுமிடத்தில் உள்ள குளம் ஒன்றினது அணைக்கட்டை நிர்மாணிப்பதற்காக கூழாங்கற்களை வழங்குவதற்கும் அவற்றை அனுப்பி வைப்பதற்கும் செயற்திட்டம் ரூபா 4,046,951 செலவிட்டிருந்தபோதும், குறித்த வேலை முடிவுறாதிருந்தது. மேலும், குளத்தின் அணைக்கட்டு வேலை சரியாக நடைபெற்று இல்லாததால் பல்வேறு இடங்களில் அது பழுதடைந்து காணப்பட்டது.

(ii) மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புதுமுறிப்புக்குள மேற்பரப்பு வேலைகளுக்கு ரூபா 2,881,795 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒப்பந்தகாரர் அவ்வேலையைச் செய்யாது விட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) முல்லைத்தீவின் தன்னிமுறிப்பு, கிளிநொச்சியின் புதுமுறிப்புக் குளங்களது புனரமைப்பு வேலைக் குறைபாடுகளை ஆலோசணையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தபோதும், குறித்த காலப்பகுதியில் அவை வெற்றிகரமாகத் திருத்தி அமைக்கப்படாது போனமை அவதானிக்கப்பட்டது.

(இ) புனரமைப்பு வேலையின் ஆரம்ப கட்டங்களின்போது நில அளவைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால், கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு வழமைப்போல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, செயற்திட்டத்தால் மேற்கொண்ட 06 புனரமைப்பு வேலைகளுக்கு 14 முதல் 44 சதவீதமான கூடுதலான வேலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மேலும், ரூபா 90,965,990 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆறு புனரமைப்பு வேலைகளுக்கு வழங்கப்பட்ட மாற்றக் கட்டளைகளுக்குரிய அங்கீகாரம் செயற்திட்டப் பணிப்பாளருக்கு பதிலாக பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளராலேயே வழங்கப்பட்டிருந்தது.